MAY 2023 **U/ID 33225/UCT6A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 30 சொற்களில் விடை எழுதுக

1. பரிசில் கடாநிலை என்றால் என்ன?

2. ஔவைக்கு அதியமான் பரிசில்தர காலம் தாழ்த்தியதன் காரணத்தை எழுதுக.

3. சேம அச்சுப் போன்றவன் என ஔவையார் யாரைப் போற்றுகிறார்? ஏன்?

4. பதிற்றுப்பத்தின் இரண்டாம்பத்தின் ஆசிரியர் யார்?

5. 'பூத்தநெய்தல்' என்பதன் பொருள் யாது?

6. 'சீர்சால்வெற்றி' என்பதன் காரணத்தை எழுதுக.

7. பத்துப்பாட்டு நூலின் முதல் நூல் எது?

8. ஆற்றுப்படை என்றால் என்ன?

9. திருமுருகாற்றுப்படையின் ஆசிரியர் யார்?

10. சிறுபாணன் என்பவர் யார்?

11. காஞ்சி என்பதன் பொருள் யாது?

12. நெடுநல்வாடை என்பதன் காரணத்தை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, 200 சொற்களில் விடை தருக

13. கபிலர் பறம்புமலையைக் கைப்பற்றக்கூறும் வழிகளை எழுதுக.

14. கபிலர், மலையைப் பார்த்து வருந்திய நிகழ்வை எழுதுக.

15. 'கானுறு கடுநெறி' எனும் பதிற்றுப்பத்து பாடல் சிறப்பை எழுதுக.

16. 'வளனறு பைதிரம்' எனும் பாடல் உணர்த்தும் கருத்துகளை விளக்குக.

17. விறலி சென்ற வழியியல்பை எழுதுக.

18. மதுரைக்காஞ்சியின் வர்ணனைத் திறத்தை விளக்குக.

19. கூதிர்காலத்தில் விலங்குகள் பறவைகளின் நிலையை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு
500 சொற்களில் விடை எழுதுக

20. கபிலரின் கையறுநிலைப்பாடல் கருத்துகளை விவரிக்க.

21. பாலைக்கௌதமனார் செல்கெழுகுட்டுவனைப் போற்றும் பாங்கினைப் புலப்படுத்துக.

22. முருகனின் மேன்மையைத் திருமுருகாற்றுப்படை வழி விவரிக்க.

23. மதுரைக்காஞ்சி கருத்துகளைத் தொகுத்துரைக்க.

24. நெடுநல்வாடை கூறும் கூதிர்கால நிகழ்வுகளை விவரிக்க.